# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

| துணர் | திருவள்ளுவர் யாண்டு ௨௲௬ | மலர் |
|---|---|---|
| ௪௬ | இராட்சச, ஆனி<br>( 1975 — ஜூன் — ஜூலை ) | ௩ |


## தமிழ் இலக்கிய மரபுகள்


இராம. சுப்பிரமணியன், M. A. B. G. L., B. Lib. Sc., நூலகர்,
4-B, தீத்தாரப்ப முதலிதெரு. திருவல்லிக்கேணி, சென்னை-5.


மக்களின் பண்பாட்டிற்கு அடிப்படையானது இயற்கை என்பதனைச் சங்க கால மக்கள் நன்கு அறிந்திருந்தார்கள். அதற்கு ஏற்ப காடும் காடு சார்ந்த இடமும் முல்லை என்றும், மலையும் மலை சார்ந்த இடமும் குறிஞ்சி என்றும். வயலும் வயல் சார்ந்த இடமும் மருதம் என்றும், கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தல என்றும். முல்லையும் குறிஞ்சியும் வெப்ப மிகுதியால் திரிந்த நிலத்தை பாலை என்றும் ஐந்து வகையாகப் பிரித்து உணர்ந்தார்கள். இப் பாகுபாடு தமிழுக்கே உரியது. இந் நிலங்களும், இந் நிலங்களுக்கு உரியனவாகக் கூறப்பட்டுள்ள காலங்களும் முதற்பொருள்கள் என்றும் கூறப்படும். இவை உயிர் வாழ்க்கைக்கு உரிய அடிப்படைப் பொருள்கள் ஆதலின், முதற்பொருள்கள் எனப்பட்டன. நிலமும் காலமும் ஆகிய இம் முதற்பொருள்களின் சார்பினுல் உண்டாகும் புல் முதல் மக்கள் ஈருக உள்ள உயிர்ப்பொருள்களும், உயிர்ப்பொருள்கள் அல்லாத பிற பொருள்களும் கருப்பொருள்கள் என்று கூறப்படும், இவை மேற்கூறிய முதற்பொருள்களை இடமாகக் கொண்டு தோன்றுவன ஆதலின், கருப்பொருள்கள் எனப்பட்டன. ஐந்து வகை நிலங்களுக்கும் உரிய மக்களின் ஒழுக்கங்கள், உரிப்பொருள்கள் எனப்படும். இவை முதற்பொருளையும், கருப்பொருளையும் பற்றுக்கோடாகக்கொண்டு நிகழும் இன்பம் பற்றிய ஒழுக்க நெறிகள் ஆகும். குறிஞ்சி நிலத்திற்குத் தலைவன் தலைவியைக் கூடுதலும் கூடுதல் நிமித்தமும், பாலை நிலத்திற்குத் தலைவன் தலைவியைப் பிரிதலும், பிரிதல் நிமித்தமும். முல்லை நிலத்திற்குத் தலைவன்

பிரிந்தபோது தலைவி ஆற்றியிருத்தலும், அதன் நிமித்தமும், நெய்தல் நிலத்திற்குத் தலைவனைப் பிரிந்தபோது தலைவி இரங்குதலும், இரங்குதல் நிமித்தமும், மருத நிலத்திற்குத் தலைவி தலைவனுடன் ஊடுதலும், ஊடுதலின் நிமித்தமும் உரிப் பொருள்கள் ஆகும்.

மக்களது வாழ்வில் நிகழ்ந்த பலவகை ஒழுக்கங்களும், அவர்கள் வாழ்ந்த நிலப் பகுதிகளுக்கும், ஏற்ற காலங்களுக்கும் உள்ள தொடர்புகளை நுனித்து உணர்ந்து, இன்ன நிலத்திற்கு இன்ன காலத்தில் இன்ன ஒழுக்கம் உரியது என்று பைந்தமிழ்ச் சான்றோர் வகைப்படுத்தி வைத்தனர்.

புறத்தே தோன்றும் காட்சிகளைப் புனைந்து சொல்லும் ஆற்றலைக் காட்டிலும் தலைவன் தலைவி முதலியோரின் அகத்தே தோன்றும் எண்ணங்களையும், அவர்களிடையே நிகழும் பேச்சுக் களையும், செயல்களையும் உணர்ச்சியும், மெய்ப்பாடும் புலப்படப் பலவாறாகப் புனைந்து பாடும் தமிழ்ப் புலவர்களின் ஆற்றல் வியத்தற்கு உரியது. மனித உள்ளத்தில் மறைந்து கிடக்கின்ற எத்தனையோ நுண்ணிய உணர்ச்சி வகைகளை எல்லாம், இவ் இருபதாம் நூற்றாண்டு உள நூல் அறிஞரும் வியக்கும் வண்ணம் இச்செய்யுட்கள் விளக்கிக் காட்டுகின்றன. மேலும், மகளிரின் மன நிலைகளை ஆண்பாற் புலவர்களும், ஆடவரின் மன நிலை களைப் பெண்பாற் புலவர்களும் நுட்பமாக அறிந்து கூறியிருப் பது நினைத்தற்கு உரியது. காதல் பற்றிய செய்திகளைக் கூறும் செய்யுட்களில், தலைவன் தலைவியர் பெயர் கூறுதல் ஆகாது என்னும் வரையறை தமிழ் மரபாகும்.

ஒருவனும் ஒருத்தியும் தனியே கண்டு, தம்முள் அன்பு கொண்டு, அவ் இருவரும் கூடி ஒழுகுதலும். அவ் ஒழுக்கம் வெளிப்பட்டபின் பெண்களின் பெற்றோர் அவளை அவனுக்கு மணம் செய்து கொடுத்தலும், பெற்றோர், அதற்கு உடன் படாராயின், அவர் அறியாமல் அப் பெண்மகளை அவன் தன்னுடன் அழைத்துச் சென்று அவளைத் தன் மனையாளாக மணம் செய்து கொண்டு வாழ்தலும் போன்ற வாழ்க்கை முறை, தமிழ் நாட்டில் பழங்காலத்தில் இருந்தது. இம் முறைக்கு ஏற்ப அமைந்த களவு, கற்பு என்னும் இருவகை ஒழுக்கமும் தமிழ் மக்களின் வாழ்வியல் நிகழ்ச்சியாகத் தொன்று தொட்டு நிலவி வந்து, பின்பு அது புலவர்களால் அழகுற அமைத்துப் பாடப் பெற்றும், இலக்கணம் அமைக்கப்பட்டும், இலக்கிய உருப் பெற்றது என்று கருதலாம்.

பெரும் புலவர்க்குப் பழங்காலத் தொடர்பும் உண்டு; எதிர் கால இயைபும் உண்டு. பழங்காலக் கலைச் செல்வங்களை அடிப் படையாகக் கொண்டு எதிர்காலக் கலைவளத்திற்கு வழிகோலு பவர் அவர்.

கானல்வரிப் பாட்டு ஒன்றில், காதலி ஒரு பறவையைப் பார்த்து வெறுப்புக் கொண்டு பேசுகிருள் "குருகே! நீ எம் முடைய கடற்கரைச் சோலைக்கு இனி வராதே" என்கிருள். "காதலர்க்கு என் துயரத்தைக் கூறுமாறு வேண்டினேன். நீ கூறவில்லை. இப்படி என் வேண்டுகோளுக்கு இசையாத நீ இங்கே இனிமேல் வரவேண்டா" என்கிருள்.

அடையல் குருகே அடையல்எம் கானல்
அடையல் குருகே அடையல்எம் கானல்
உடைதிரை நீர்ச் சேர்ப்பற்கு உறுநோய்
உரையாய்
அடையல் குருகே அடையல்எம் கானல்

என்கிருள் இந்த உணர்ச்சியையே தெய்வத்தன்மை உடைய தாக அமைத்து விட்டார் நம்மாழ்வார் :

நீ அலையே சிறுபூவாய் நெடுமாலார்க்கு என் தூதாய்
நோயெனது நுவல்என்ன நுவலாதே
இருந்தொழிந்தாய்
சாயலொடு மணிமாமை தளர்ந்தேன்நான்
இனிஉனது
வாயலகில் இன்னடிசில் வைப்பாரை நாடாயே

கானல்வரி, இருவகை உள்ளம் அன்பின் வயப்பட்டு உணரும் உணர்ச்சிகளின் காவியம். கானல்வரிப் பாட்டைக் கேட்கும்போதெல்லாம் சங்க இலக்கிய மரபில் பாடும் தமிழர் குரலையே கேட்கிருேம்.

காதலன் பிரிந்து சென்ற வழியை நோக்கி ஏங்குவது அகநானூறு முதலியவற்றில் காணப்படுகிறது. அன்புடையவர் சென்றுள்ள திசையை நோக்கிக் கண்கள் நாடுவதும், அந்தத் திசைநோக்கித் தொழுவதும் உண்டு பரதனும் திசைநோக்கித் தொழுது நிற்பதாகக் கம்பர் பாடியுள்ளார் இக்காலத்தில் புகைவண்டி சென்ற பின்னும் அசையாமல் நிற்கும் காதலரின் கண்களில் அந்த ஏக்கத்தைக் காணலாம்.

பகல்மாய் அந்திப் படுசுடர் அமையத்து
அவன்மறை தேஎம் நோக்கி மற்றிவன்
மகனே தோழி என்றனள்

என்பது அகநானூற்றில் காணப்படும் சொல்லோவியம்.

கானல் வரியில் இதே உணர்ச்சி வளர்ந்து விளங்குவதைக் காண்கிறோம். காதலனுடைய தேர்ச் சக்கரம் போன வழியைப் பார்த்து ஏங்குகிறாள் காதலி. அந்த இடம் கடற்கரை. தேர் சென்ற வழியையாவது பார்த்து ஆறுதல் அடைய முயன்ற காதலிக்கு அதுவும் நெடுநேரம் வாய்க்காமல் போயிற்று. கடல் அலைகள் வந்து அந்த வழியையும் சிதைத்து மாற்றி விட்டதாம். அந்தக் கொடுமையை நினைந்து ஏங்குகிறாள் காதலி.

புள்ளியல்மான் தேர்ஆழி போன வழியெல்லாம்
தெள்ளுநீர் ஓதம் சிதைத்தாய் மற்று என்செய்கோ
தெள்ளுநீர் ஓதம் சிதைத்தாய் மற்று எம்மோடீங்கு
உள்ளாரோடு உள்ளாய் உணராய்மற்று
என்செய்கோ.
தேர்ந்தநங் காதலர் நேமி நெடுந்திண்தேர்
ஊர்ந்த வழிசிதைய ஊர்கின்ற ஓதமே
பூந்தண் பொழிலே புணர்ந்தாடும் அன்னமே
ஈர்ந்தண் துறையே இதுதகாது என்னீரே
நேர்ந்தநங் காதலர் நேமி நெடுந்திண்தேர்
ஊர்ந்த வழிசிதைய ஊர்ந்தாய்வாழி கடலோதம்
ஊர்ந்த வழிசிதைய ஊர்ந்தாய்மற்று எம்மோடு
தீர்ந்தாய்போல் தீர்ந்திலையால் வாழி கடலோதம்

தினைப் புனத்தைக் காவல் காக்கும் கானவன் கள்ளுண்டு மயங்கிய காரணத்தால் காவலை மறந்து கிடக்கின்றான். அப்போது ஒரு யானை தினை உண்ண வருகிறது. அவனுடைய மனைவி அதைக் கண்டதும் தன் கணவனை எழுப்பாமல் தினையைக் காப்பதற்கு முயற்சி செய்கிறாள். பரணமேலிருந்து யாழ் எடுத்துக் குறிஞ்சிப்பண் இசைத்து, யானை அந்த இசையால் மயங்கித் தூங்குமாறு செய்கிறாள். இது சங்கப் பாட்டில் புலவர் ஒருவர் தந்துள்ள சொல்லோவியம்

உளைமான் துப்பின் ஓங்குதினைப் பெரும்புனத்துக்
கழுதில் கானவன் பிழிமகிழ்ந்து வதிந்தென
உரைத்த சந்தின் ஊரல் இருங்கதுப்பு

ஐதுவரல் அசைவளி ஆற்றக் கைபெயரா
ஒலியல் வார்மயில் உளரினள் கொடிச்சி
பெருவரை மருங்கில் குறிஞ்சி பாடக்
குரலும் கொள்ளாது நிலையினும் பெயராது
படாஅப் பைங்கண் பாடுபெற்று ஓய்யென
மறம்புகல் மழகளிறு உறங்கும்.

வெளிப்படச் சொல்லப்பட்ட பொருளின் புறத்தே தங்கிய குறிப்புப் பொருளை இறைச்சியென வழங்குவது தமிழ் மரபு. "இறைச்சிப் பொருள் என்பது உரிப்பொருளின் புறத்தாகித் தோன்றும் பொருள். அஃதாவது கருப்பொருளாகிய நாட்டிற்கும் ஊர்க்கும் துறைக்கும் அடையாகி வருவது" என்பர் இளம்பூரணர். இத்தகைய இறைச்சிப்பொருள் பெரும்பான்மையும் அகப்பொருளொழுகலாற்றில் தலைவனது கொடுமை கூறும் வழிப் பிறப்பதென்றும், கூறவேண்டுவதோர் பொருளின் புறத்தே புலப்பட்டு அப்பொருட்கு உபகாரப்படும் பொருட்டன்மையினை யுடையதென்றும் கூறுவர் நச்சினார்க்கினியர். "இறைச்சி தானே யுரிப்புறத்ததுவே" என இளம்பூரணரும், "இறைச்சிதானே பொருட்புறத்ததுவே" என நச்சினார்க்கினியரும் பாடங் கொண்டனர்.

இறைச்சி பொருளாகிய இதன் கூறுபாட்டினை ஆழ்ந்து உணரவல்லார்க்கு வெளிப்படக் கூறப்படும் பொருளின் புறத்ததாகிவரும் அவ்விறைச்சியினுள்ளே உட்பொருளாகத் தோன்றும் வேறுபொருள்களும் உள என்பர் ஆசிரியர் எனவே இறைச்சிப் பொருள் பிறிதுமோர் பொருள் கொளக்கிடப்பனவும் கிடவாதனவும் என இருவகைப்படும் என்பர் இளம்பூரணர். "கருப்பொருள் பிறிதோர் பொருட்கு உபகாரப்பட்டு பொருட்டாதலேயன்றி, அக் கருப்பொருள் தன்னுள்ளே தோன்றும் பொருளும் உள ; அஃது உள்ளுறை யுவமத்தின் கூற்றிலே அடங்குமாறு போல நடக்குமிடத்து, அவ்வுள்ளுறையுவமம் அன்று இஃது இறைச்சி யென்று ஆராய்ந்துணரும் நல்லறிவுடையோர்க்கு" என இறைச்சிப் பொருளின் கூறுபாட்டினைச் சிறிது விரித்து விளக்குவர் நச்சினார்க்கினியர்.

தலைவி, தலைவனது பிரிவாற்றாது வருந்திய காலத்து, பிரிந்து சென்ற தலைவனால் வழியிடைக் காணப்பட்ட கருப்

பொருள்களுள் அவன் தலைவியை நினைந்து அன்பு செய்தற்குத் தருவனவாக அமைந்த சிலவற்றின் நிகழ்ச்சிகளைச் சுட்டி இறைச்சிப் பொருள்படத் தோழி கூறுதலும் தலைவியை வற்புறுத்தும் குறிப்பினதாகும்.

உடனுறை, உவமம், சுட்டு, நகை, சிறப்பு என உள்ளுறை ஐந்து வகைப்படும் என்பர் ஆசிரியர். "உடனுறையாவது உடனுறைவதொன்றைச் சொல்ல அதனானே பிறிதொரு பொருள் விளங்குவது. உவமம் என்பது உவமையைச் சொல்ல உவமிக்கப்படும் பொருள் தோன்றுவது. சுட்டு என்பது ஒரு பொருளைச் சுட்டிப் பிறிதோர் பொருட்படுதல். நகையாவது நகையினாற் பிறிதொரு பொருள் உணர நிற்றல். சிறப்பு என்பது இதற்குச் சிறந்தது இதுவெனக் கூறுவதனானே பிறிதோர் பொருள் கொளக்கிடப்பது" என விளக்கங் கூறுவர் இளம்பூரணர்.

உடனுறையாவது, நான்கு நிலத்தும் உளதாய் அந்நிலத்துடன் உறையுங் கருப்பொருளாற் பிறிதொன்று பயப்ப மறைத்துக்கூறும் இறைச்சி. உவமமாவது அக்கருவாற் கொள்ளும் உள்ளுறை யுவமமும் ஏனையுவமமும். நகையும் சிறப்பும் பற்றுது ஒன்று நினைந்து ஒன்று சொல்வனவும், அன்புறுதகுந இறைச்சியுட் சுட்டி வருவனவும் சுட்டெனப்படும். நகையாவது ஒன்று நினைந்து ஒன்று கூறுதல் ஏனையுவமம் நின்று, உள்ளுறையுவமத்தைத் தருங் கருப்பொருட்குச் சிறப்புக் கொடுத்து நிற்பது சிறப்பு என்னும் உள்ளுறையாம். இவை ஐந்தும் ஒன்றினை உள்ளுறுத்தி அதனை வெளிப்படாமற் கூறுதலின் உள்ளுறையெனப்பட்டன என்பர் நச்சினார்க்கினியர்.

நெற்கொள் நெடுவெதிர்க் கணந்த யானை
முத்தார் மருப்பின் இறங்குகை கடுப்பத்
துய்த்தலை வாங்கிய புனிறுதீர் பெருங்குரல்
நற்கோட் சிறுதினைப் படுபுள் ஓப்பி
எற்பட வருதியர் எனநீ விடுத்தலிற்

(குறிஞ்சிப்பாட்டு: 35 — 39)

கபிலரின் குறிஞ்சிப்பாட்டில் வருகின்ற இந்த நான்கு வரிகளும் இயற்கையினைப் படம் பிடித்துக்காட்டுகின்றன.

"யானையின் மருப்பிலே கிடந்த வளைந்த துதிக்கையைப் போன்று, வளைந்து முதிர்ந்த கதிர்களையுடைய தினையிடத்தே வீழும் பறவைகளை ஓட்டி, ஞாயிறு மறையும்போது மீண்டும் வருவீராக என, நீ எம்மைப் போக விடுகையாலே யாங்களும் சென்று" என்று பொருள் கொள்ளுகின்றோம்.

மலையிடத்தே ஓங்கி வளர்ந்த வெதிர் தலைவியின் உயரிய குடியாகவும், அவ்வெதிர் ஈன்ற நெல் அக்குடியில் பிறந்த தலைவியாகவும், பசிகொண்ட யானை, வேட்கைமிக்க தலைவனாகவும், அவ்வியானை வெதிர் நெற்கு அணந்து நின்று முயலுதல், தலைவியை எய்தத் தலைவன் இரவுக் குறிக்கண் வந்து முயலுதலாகவும், அதன் கைக்கு அகப்படாத உயரத்தே அந்நெல் இருத்தல், தலைவி இற்செறிக்கப்பட்டிருத்தலாகவும், யானை தன் துதிக்கையைத் தன் கொம்பினிடத்தே இறக்கிப் போடுதல் தலைவியைக் காணப் பெறாது மீள்தலாகவும், முத்தார் மருப்பு தலைவனுடைய நற்குணங்கள் நிறைந்த உறுதிப்பாடாகவும், அதன்கண் கையின் சோர்வினை அகற்றிக் கோடல், தன் அறிவானே தன் வருத்தத்தைத் தலைவன் ஆற்றிக் கோடலாகவும் உள்ளுறை உவமம் காண்க

காதலன் காதலியுள்ளத்துத் தோன்றி நிற்கும் காதல் நன்கு முறுகிப் பெருகுமாறு, திருமணத்தை உடனே செய்துகொள்ள விரையாமல் சிறிது காலம் நீட்டிக்கக் கருதுகின்றான். அவன் கருத்தை எவ்வாற்றாலோ உணர்ந்து கொள்ளுகிறாள் தோழி. ஒருநாள் தலைவியொடு செல்லும் தோழி அவனை ஓரிடத்தே காண்கின்றாள். அவள், அவனை நோக்கி, விரைவாக இவளை மணந்துகொள் என்று சொல்லி நீங்குகிறாள். அப்போது மகட்கொடை வேண்டி வேற்றோர் சிலர் தலைவி மனைக்கு வந்துள்ளனர். அவர்க்குப் பெற்றோர் இணங்கிவிடின் தலைமக்களின் காதலுறவு சிதைந்துவிடும் என்பதை அவனுக்குத் தெரிவிக்கவேண்டும்.

வெளிப்படையாக உரைப்பதற்கும் அவ்விடத்தே வாய்ப்பில்லை. அதனால் அவள்,

சிறுநனி வரைந்தனை கொண்மோ பெருநீர்
வலைவர் தந்த கொழுமீன் வல்சிப்
பறைதபு முதுகுரு கிருக்கும்
துறைகெழு தொண்டி யன்ன இவள்நலனே
(ஐங்கு. 180)

நெய்தல் நிலத்து வலைஞர்கள் கடலிலிருந்து கொழுவிய மீன்களைப் பிடித்துக் கொணர்ந்து கரையில் எறிகின்றார்கள்; அவற்றைக் கவர்ந்து போதற்கு வயது முதிர்ந்து நெடிது பறக்கும் குருகுகள் ஒருபால் தங்கியிருக்கின்றன. இக்காட்சி யமைந்த தொண்டிநகர் போல்பவள் தலைவியென அதனை இப்பாட்டோடு இயைவிக்கின்றார்.

பரதவர் கொணர்ந்த கொழுமீன் வல்சியின் பொருட்டுப் பறைதபு நாரை தங்கியிருக்குமாறு போல, தலைமகள் வைகிய எம்மனையிடத்து வேற்றுவரைவு குறித்துச் சான்றோர் வந்துளர் என்பது உள்ளுறை.

முதுமை கண்டு இரங்கிக் கொழுமீன் வல்சியினை வலைவர் எறியார் என்பதனை அறிந்து வைத்தும் குருகு அவ்வல்சிப் பொருட்டு இருந்ததாக, நீ வரைதல் வேண்டி முயலாமை என்னை என இப்பாட்டின் பொருட்புறத்தே இறைச்சி தோன்றுமாறு காண்க.

# நம்தாய்த் தமிழ்மக்காள் நீர்.

புலவர். அ. வைத்திலிங்கம், மண்டபம் முகாம்.

1 வெண்பா கலிப்பாவும் வஞ்சிப்பா ஆசிரியம்
நண்பாய் அளிக்கின்ற நற்றமிழே — பண்பால்
குறள்மணி மேகலை கொஞ்சும் சிலம்பு
திறக்கலியும் தந்தாய் திகழ் !

2 தாய்மொழியைக் கல்லாரும் தாய்மொழியில் கல்லாரும்
தாய்மொழிக்கு ஆக்கம் தருவாரோ — தாய்மொழியின்
பற்றில்லார் தாய்நாட்டைப் பெற்றெடுத்த தாயாரைப்
பற்றுவைத்துப் பேணுவரோ சொல் !

3. நீயோ அமிழ்தம் நிலவைப்போல் தண்ணளியால்
பேயோரைக் காயாமல் போயினையோ? — தாயோதன்
பிள்ளைக் குறும்பைப் பொருட்டாகக் கொள்ளாமல்
தள்ளும் தகைமை என

4. மொழிவெறி வேண்டா முழுமனத்தர் — ஆவீர்
மொழிக்கலப்புச் செய்வதனல் என்றே — மொழியும்
கடையர் பிறமொழிபால் காதல் உடையார்
அடையார் அவர்குறிக் கோள்.

5. இயற்கை இயைபு; இனிமை; எளிமை;
இயற்கை யழகு இவைதாம் — இயற்கை
எம்தாய் மொழிக்கு இவைபோற்றி வாழ்மின்கள்
நம்தாய்த் தமிழ்மக்காள் நீர் !

# "திருக்குறளில் அற உவமைகள்"

கவிஞர் கு. எழிலரசு, பி. எசி., எம். ஏ.,
சான்றிதழ் — மானிடவியல்,
விரிவுரையாளர்,
திருக்குறள் ஆராய்ச்சிப் பகுதி, தமிழ்த்துறை,
சென்னைப் பல்கலைக் கழகம்.

முன்னுரை

1.1. திருக்குறள் ஓர் அறநூல் அறிவு நூல்; பண்டையோர் கண்டகொண்ட 'அறமுதலாகிய மும்முதற் பொருள்' களையும் தனித்தனி இயலாக நெறிப்படுத்தி உரைப்பது இதன்கண் அமைந்துள்ள அற உவமைகளைச் சுட்ட முனைவதே இக்கட்டுரையின் நோக்கம்

அறத்துப்பாலில் அற உவமைகள்

2.1. எண்ணம். சொல், செயல் என்னும் மூன்றிலும் மலரும் அறங்களை அழகுற உரைப்பது அறத்துப்பால். இதனில், ஓரறத்தை விளக்க பிறிதோர் அறத்தை உவமையாகக் கூறும் போக்கை ஒரு சில இடங்களில் கையாள்கின்றார் வள்ளுவப் பெருந்தகை

2.2. "கொடுப்பது தழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்
உண்பதூஉம் இன்றிக் கெடும்." —166

"அவ்வித் தழுக்கா றுடையானைச் செய்யவள்
தவ்வையைக் காட்டி விடும்." —167

"அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத்
தீயுழி யுய்த்து விடும்." 168

"அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமுஞ் செவ்வியான்
கேடும் நினைக்கப் படும்." —169

என்னும் குறள்களால் அழுக்காறுடையான், ஆக்கம் இரண்டிற்கும் இடையே உள்ள 'வெடிப்பு நிலை' யைப் பல்வேறு கருத்து வகைகளான் விளக்குகின்றார். இக்கருத்துகளின் பிழிவு அழுக்காறுடையான்கண் ஆக்கமில்லை எனக் கொள்ளலாம், இதனை, ஒழுக்கமிலான்கண் உயர்வின்மைக்கு உவமையாக்கி.

"அழுக்கா றுடையான்கண் ஆக்கம்போன் றில்லை
ஒழுக்க மிலான்கண் உயர்வு" —135

எனச் செம்மையுற இயைபுபடுத்துகின்றார்.

2.3 விருந்தோம்பல், தமிழர் தம் தலையாயப் பண்புகளுள் ஒன்று. பொய்யாமொழிப் புலவர், விருந்தோம்பலின் பண்பை-பயனை-பாங்கைத் தனியோர் அதிகாரத்தானே விளக்குகின்றார். இவ்வதிகாரத்தில்,

"உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா
மடமை மடவார்கண் உண்டு" —89

என்னும் குறள்வழி, வருவிருந்து ஓம்பாதார் எத்துணையளவு செல்வம் பெற்றவராய் இருப்பினும் வறியரே என்னும் கருத்தைப் புலப்படுத்துகின்றார்; இக்கருத்திற்கு மேலும் மெருகூட்டி,

"இன்மையுள் இன்மை விருந்தொரால் வன்மையுள்
வன்மை மடவார் பொறை" —153

எனப் பொறையுடைமை அதிகாரத்தில் வரும் குறளில் உவமையாக்கி விடுகின்றார்.

2.4. "தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றால் தேரின்
அருளாதான் செய்யும் அறம்" —249

என்பது அருளுடைமை அதிகாரத்தில் வரும் குறள். இதில் காணும் உவமை.

"தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றால்' என்பது. உவமையின் பொருள், 'அறிவுத்தெளிவு இல்லாதவன் மெய்ப்பொருளைக் கண்டதுபோல' என்பது இதனால் வெளிப்படுத்த விழையும் பொருள், 'அறிவுத்தெளிவு அற்றவன் மெய்ப்பொருளை உணரல் இயலாது; அறிவுத்தெளிவு உள்ளவனே மெய்ப்பொருளை உணரல் இயலும்" என்பது.

இக்கருத்தை,

"ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வானம் நணிய துடைத்து" —353

"கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி" —356

என்னும் குறள்களில் ஆழ உணர முடிகின்றது.

அறத்துப்பாலில் புதிய அறம்

3.1. அறத்துப்பாலில் ஓர் அதிகாரத்தில் கூறிய ஓர் அறத்தைப் பிறிதோர் அதிகாரத்தில் உவமையாகக் கூறிய வள்ளுவப் பெருந்தகை. அறத்துப்பாலிலே கூறாத ஒரு கருத்தை-அறக் கருத்தை உவமையாக்கிக் கூறுகின்ற போக்கையும் காணுகின்றோம்.

"அளவறிந்தார் நெஞ்சத் தறம்போல நிற்கும்
களவறிந்தார் நெஞ்சில் கரவு" —288

என்னும் குறளில், "அளவறிந்தார் நெஞ்சத்தில் அறம் நிலைத்து நிற்கும்" என்ற கருத்தைப் புதுவதாக உரைக்கின்றார்.

பொருட்பாலில் அற உவமைகள்

4.1. ஒழுக்கம் மேன்மை தரும்; இழுக்கம் கீழ்மை தரும்; இஃது அறநூல்களின் துணிபு. வள்ளுவப் பெருந்தகையும்,

"அழுக்கா றுடையான்கண் ஆக்கம்போன் றில்லை
ஒழுக்க மிலான்கண் உயர்வு" —135

"ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை; இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி" —137

என்னும் குறள்களின்வழி இக்கருத்தை நிலைநாட்டுகின்றார். அறத்துப்பாலில் ஒழுக்கமுடைமை அதிகாரத்தில் கூறும் இக்கருத்துகளைப் பொருட்பாலில் அவையறிதல் அதிகாரத்தில், சான்றோர் அவைக்களத்தில் குற்றப்படலுக்கு உவமையாக்கி,

"ஆற்றின் நிலைதளர்ந் தற்றே வியன்புலம்
ஏற்றுணர்வார் முன்னர் இழுக்கு" —716

எனஉரைக்கின்றார்,

4.2. "குலஞ்சுடும் கொள்கை பிழைப்பின்" என்னும் கருத்து, ஒழுக்கமுடைமை அதிகாரத்தில் வரும்,

"ஒழுக்க முடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்" —133

"மறப்பினும் ஓத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்" —134

என்னும் குறள்களின் பிழிவு எனலாம். இதனைப் பொருட் பாலில், நாணுடைமை என்னும் அதிகாரத்தில் வரும்,

"நலஞ்சுடும் நாணின்மை நின்ற கடை" —1019

என்னும் கருத்திற்கு உவமையாக்குகின்றார்.

4.3. மேலும்,

"ஒருமை மகளிரே போலப் பெருமையும்
தன்னைத்தான் கொண்டொழுகின் உண்டு" —974

என்னும் குறளில் வரும்,

"ஒருமை மகளிரே போல"

என்னும் உவமை, 'வாழ்க்கைத் துணை நலம்' என்னும் அதிகாரத்தில்வரும்,

"பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மை யுண்டாகப் பெறின்" —54

"தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்" —56

"சிறைகாக்கும் காப்பெவன் செய்யும் மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை" —57

என்னும் குறள்களின் மையக் கருத்து எனலாம்.

இன்பத்துப்பாலில் அற உவமை

5.1. "பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல்" —44

"பாத்தூண் மரீஇ யவனைப் பசிஎன்னும்
தீப்பிணி தீண்டல் அரிது" —227

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாந் தலை" —322

என அறத்துப்பாலில் பல்வேறு இடங்களில் பகுத்துண்டு வாழ்வதன் சிறப்பை வள்ளுவப்பெருந்தகை விளக்குகின்றார் (இல்லறவியலிலும் துறவறவியலிலும்). இன்பத்துப்பாலில், அரிவையின் முயங்கப் பெறும் இன்பத்திற்குப் பகுத்துண்டு வாழ்வதால் எய்தும் இன்பத்தை உவமையாக்கி,

" தம்மில் இருந்து தமதுபாத் துண்டற்றால்
அம்மா அரிவை முயக்கு." —1107

என விளக்கும் நயம் ஆழ்ந்து நோக்கற்குரியது.

### கருத்துகள் விளக்கம்

6.1. திருக்குறள் முழுமையும் நோக்கின், எட்டு இடங்களில் அற உவமைகள் வந்துள்ளன அவற்றுள், அறத்துப்பாலில் வருவன 4; பொருட்பாலில் வருவன 3; இன்பத்துப்பாலில் வருவது 1.

6 2 திருக்குறளில் வரும் அற உவமைகள் எட்டினுள்ளும் இல்லறவியலுக்குரிய உவமைகள் 7; துறவறவியலுக்குரிய உவமை 1

6.3. இல்லறவியலுக்குரிய உவமைகளுள்ளும் அதிகமாகச் சுட்டப்படுவன இரண்டு. 1. விருந்தோம்பல். 2. ஒழுக்கமுடைமை.

### அறியப்படும் கருத்துகள்

7 1. வள்ளுவர் அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப் பால் மூன்றிலும் கையாண்டுள்ள அற உவமைகள், அவர் அறத்தில் கொண்ட அசைக்க முடியா ஆழ்ந்த உணர்வின் வெளிப்பாடுகளே எனலாம்; திருக்குறள் ஓர் அறநூல் என்பதற்கு இந்த அற உவமைகள் ஒரு சான்று எனலாம்.

7.2. அற உவமைகளைப் பொறுத்தவரை திருவள்ளுவர் துறவறத்தினும் இல்லறத்தையே கருத்தில் கொண்டுள்ளார் பெரிதும் போற்றியுள்ளார் எனக் கருத இடமுளது.

7.3 அற உவமைகளைப் பொறுத்தவரை இல்லறவியலிலும் விருந்தோம்பலாகிய சமுதாய அறத்தையும், ஒழுக்கமுடைமையாகிய தனிமனிதப் பண்பையும் பெரிதும் போற்றியுள்ளார் எனக் கொள்ளலாம்.

# அரவமெனத் தமிழை அழைப்பதேன்?

பேராசிரியர். கோ. தெய்வநாயகம்,
எம். ஏ, பி. எசு- சி, டிப் -இன்- அக்.

"தமிழை 'அரவம்' என்றழைப்பதற்கு உண்மைக்காரணம் என்ன என்பது இன்னும் ஆராய்ச்சிக்கு இடமுயுள்ளது"

Dr கால்டுவெல்

ஒப்பிலக்கணத்தில் தமிழை நன்கு ஆய்கின்ற கால்டுவெல் தமிழை 'அரவம்' என்றழைப்பதற்கான காரணங்களை ஆய்கின்றபோது. 'இது பற்றி மேலும் ஆய்வு நிகழவேண்டும்' என்று குறித்துச் செல்லுகின்றார் எனவேதான் யான் இத்தலைப்பில் என் அறிவிலெட்டிய கருத்துக்களை எடுத்தியம்ப விழைந்தேன்.

'அரவம்' எனுஞ்சொல் சங்ககாலத்தில் ஒலி, பாம்பு என்ற பொருளில் தான் வழங்கிவந்தது. இடைக்காலத்தில் 'சலசலப்பு' என்ற பொருளில் வழங்கி, பின் மெல்லொலி எனவும் பேரொலி எனவும் அமையத்திற்கேற்ப வழங்கப்பட்டு வருகின்றது. எனவே அரவம் என்ற சொல் தமிழில் ஒலி, பாம்பு என்ற பொருண்மை காட்டுவதாகவேயுள்ளது

**அரவமென்று அழைத்தவர்கள் :—**

தமிழை அரவம் என்று அழைப்போர்கள் "தக்காணத்திலுள்ள முஸ்லீம்களும் கன்னடர்களும், தெலுங்கர்களும் தான் (கா, ஒ இ — பக். 20) என்று கால்டுவெல் குறிப்பிடுகின்றார். தமிழர்கள் தமிழை அரவம் என்று யாண்டுமழைத்ததில்லை என்பதனையும் "இழுக்குடையதாகிய இவ்வரவம் என்ற பெயரைத் தமிழர் தாமாகவே தம் மொழிக்குச் சூடிக்கொண்டனர் என்பது அறிவுடைத்தாகாது" (கா, ஒ இ — பக். ) என்றும் கால்டுவெல் குறித்துச் செல்லுகின்றார்.

அரவமென்று அழைக்கின்ற மேற்கூறிய முஸ்லீம்களும், கன்னடர்களும், தெலுங்கர்களும் ஒருவரை ஒருவர் பின்பற்றியே, தமிழை அரவம் என அழைத்திருத்தல் வேண்டும். அப்படிப் பார்க்கின்றபோது கன்னட, தெலுங்கர்கள் தமிழை 'அரவம்' எனக்குறிப்பிடுவதைக் கண்டுதான் பிற்காலத்தினராய முஸ்லீம் களும், மதம் மாறிய முஸ்லீம்களும் 'அரவம்' என்பதன் பொருள்

புரிந்தோ புரியாமலோ அக்குறியீட்டினாலேயே தாங்களும் தமிழை விளிக்கலாயினர் என்பது நன்கு புலனாகின்றது. தெலுங்க, கன்னடர்களுள், தெலுங்கர்கள் சற்றே மொழிப் பழமை உடையவர்களாக விளங்குவதோடு, தமிழ் நிலத்தோடு அதிகத் தொடர்புடையவர்களாதலின், முதன் முதலில் தமிழை 'அரவம்' என்றழைத்தவர்கள் தெலுங்கர்கள் தாம் என்பது தேற்றம்.

அரவம் — நில அடிப்படையில்

செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்திலொன்றாயுள்ளது அருவா நாடாகும். பிறிதொன்று அருவா வடதலை நாடாம். இவ்விரு நாட்டின் கண்ணும் கொடுந்தமிழ் வழங்கி வந்ததென்று தொல்காப்பிய சொல்லதிகார

"செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தும்
தங்குறிப்பினவே திசைச் சொற் கிளவி"
(400 — எச்சவியல்)

இவ்வருவா நாட்டில் வாழ்ந்து வந்தவர்கள் அருவர்கள் என்றழைக்கப்பட்டிருத்தல் வேண்டும் அருவர்கள் பேசியமொழி 'அருவம்' என்றழைக்கப்பட்டு பின் 'அரவம்' என வழங்கப் பட்டிருத்தல் வேண்டும்.

மேலும் ஒரு கருத்து மிகத்தெளிவாக நாம் கொள்ள வேண்டும் அது 'அருவா' நாட்டில் வாழ்ந்து வந்தவர்கள் செந்தமிழ் பேசினரல்லர் என்பதுதான். இவ்வருவா நாடு தமிழகத்தின் வடமேற்குக் கோடியில் வேணாட்டிற்குக் கிழக்கில்மைந்திருந்த நிலப்பகுதியாகும். கொடுந்தமிழ் சற்றே அதிகமான வல்லினங்களை உடையதாக வழக்கிலிருப்பதை இன்றும் நாமறிவோம் எனவே வன்மையான ஒலியமைப்புடைய கொடுந் தமிழைத்தான் அருவா நாட்டிற்கு வடக்கிலிருந்த தெலுங்கர்களும் 'அரவம்' அதாவது ஒலியுடையது என்று குறிப்பித்து அம் மொழி பேசுவோரை 'அரவாளு' எனவுமழைத்து அவர்கள் வாழ்ந்து வந்த நாட்டினை அருவா நாடு எனவுமழைத்தனர் போலும். மெல்லின, இடையின ஒலியமைப்புகளை உடைய மென்மையான, இனிமையான சுந்தரத் தெலுங்கு பேசும் தெலுங்கர்கள். வல்லின ஒலியினை அதிகமாகக் கொண்டு பேசப்பட்ட கொடுந்தமிழை 'அரவம்' அதாவது "அதிக ஒலி உடையது" எனக் குறித்ததில் வியப்பொன்றுமில்லை. அருவா நாட்டினை டாலமி.

"சோழ மண்டலக்கரையில் நெல்லூர்ப் பகுதியில் அர்வர்ணி' என்ற மக்கள் வாழ்ந்து வருகின்றனர்" என்று குறித்துச் செல்லுகின்ருர். இக்குறிப்பினுல் டாலமி 'அர்வர்ணி' என்று குறிப்பித்த 'அருவர்கள்' பேசிய மொழி 'அரவம்' என்பது பெற்றும்.

அரவம் — ஆய்வு

அடுத்து கால்டுவெல் அரவம் என்பதுபற்றி ஆய்கின்ற போது

"சில தெலுங்குப் பண்டிதர்கள் 'அ + ரவ' அதாவது ஹ போன்ற ஒலியில்லா வடவெழுத்து என்று கூறுவர்" என்று குறிப்பிடுவர். அவ்வாறு 'ஹ' போன்ற ஒலியில்லா எழுத்து என்று குறிப்பதற்கு 'அரவம்' என்ற சொல்லே 'அ + ரவ' என்று பிரித்துப் பொருள் காண்பது 'மரம்' என்ற பெயர்ச்சொல்லே பொருள் காண்கின்றேனென்று 'ம+ரம்' அதாவது அரத்தால் அறுக்கப்படும் ஒருயிர்ப் பொருள் என்று நம் அறிவுத் திறமைக்கேற்ப வேர்ச் சொல் கண்டு பொருள் காண்பதோ டொக்குந்தன்மைத்தாம்.

"ஓசையற்ற மொழி என்பதனைக் குறிக்க தெலுங்கர் 'அரவ—மு' என்று குறித்து அம்மொழி பேசுவோரை 'அரவாளு' என்றழைத்தனர்" என்று கூறிய கால்டுவெல் பிறகு அதே பகுதியில் "வடமொழியில் 'ரவ' என்ற சொல் பேரொலியைக் குறிப்பதாகும்; தமிழிலிலுள்ள 'அரவம்' என்ற சொல் மெல்லிய ஓசையைக் குறிப்பதாக அமையும்" என்று குறிப்பிட்டு 'தமிழ் ஓசையற்றது' எனவும், மெல்லிய ஓசையுடையது எனவும் ஒன்றற்கொன்று மாறுபட்ட பொருள் பயக்கும் ஆய்வுரையினை எடுத்துக் கூறியுள்ளார். ஆனல் தொல்காப்பியர்

எல்லா எழுத்தும் வெளிப்படக் கிளந்து ..........
"அகத்தெழு வளியிசை அரில்தபநாடி
அளபிற் கோடல் அந்தணர் மறைத்தே
அஃதிவண் நுவலாது
எழுந்து புறத்திசைக்கும் அளபு நுவன்றிசினே"
— (பிறப்பியல் 20)

என்று கூறியுள்ளார்.

அதாவது "வெளிப்படாத நிலையில் உள்ள எழுத்துக்களை ஒலியமைப்பில் பெற்றுள்ளது வடமொழியாகும். தமிழ் எழுத்துக்கள் அனைத்தும் நெஞ்சு, மூக்கு, உரம் போன்ற உறுப்புக்களினின்றும் வெளிப்பட்ட ஒலியமைப்பினை உடையனவாகும்' அத்தமிழ் எழுத்துக்களின் அளவு தான் யான் கூறலுற்றது'. என்று தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார். எனவே தான் குறில், நெடில், வல்லின, மெல்லின, இடையின, உயிர், மெய், அளபெடை, ஆய்தம் போன்ற எழுத்துக்களாகத் தமிழை வகுத்து அவற்றின் வெளிப்பட்ட ஒலியமைப்பினை

"கண்ணிமை நொடியென அவ்வே மாத்திரை"

என்பதனால் அளபு படுத்தி, மேலும் மகரக்குறுக்கம், ஐகாரக் குறுக்கம் போன்றவற்றையும் காட்டி

"அரையளவு குறுகல் மகரம் உடைத்தே
இசையிடன் அருகுந் தெரியுங்காலை"

எனக்குறிப்பிட்டுள்ளார்

1 "அ, இ, உ, எ, ஒ என்னும் அப்பாலைந்தும்
ஓரளபு இசைக்கும் குற்றெழுத்தென்ப"
2. "ஆ, ஈ, ஊ ஏ, ஐ ஓ, ஔ எனுமப்பாலேழும்
ஈரளபிசைக்கும் நெட்டெழுத்தென்ப"
3. "மூவளபிசைத்தல் ஓரெழுத்தின்றே"
4. "நீட்டம் வேண்டின் அவ்வளபுடைய
கூட்டி யெழூஉ தல் என்மனார் புலவர்"

— தொல், எழுத்து-நூன்மரபு 3, 4, 5, 6

என்பன போன்ற நூற்பாக்கள் தமிழ் எழுத்துக்களின் ஒலியமைப்பினை எடுத்துக் காட்டுவன வாயுள்ளன

எனவே தமிழை ஒலியற்றது 'அ+ரவ' என்று பொருள் கொள்வது முற்றிலும் பொருந்தாது. மேலும் தமிழை 'ஆரவாரமுடையது' என்ற பொருளில் 'அரவம்' என்றழைக்கப்பட்டதாக இருக்குமேயாயின் அக்கருத்தினையும் "மூவளபிசைக்கும் ஓரெழுத்தின்றே" என்ற நூற்பாவினைக் கொண்டு மறுக்கலாகும். ஏனெனில் குறில், நெடில் என்பனவெல்லாம் தத்தமக்குரிய இயல்பான அளபுகளைக் கொண்டு ஒலிக்கப்படுகின்றனவேயொழிய பேரொலியுடையதாக செந்தமிழில் ஒலிக்கப்படவில்லை என்பது தெளிவான கருத்தாம்.

" இவையெல்லாம் அரவம் என்ற சொல் ஒரு மொழியையோ, அம்மொழிபேசும் மக்களினத்தாரையோ குறிக்க எழுந்த தமிழ்ச் சொல்லாகக் கொண்டு இடர்ப்பட்டுக் கூறினவையேயாம். அப் பொருளில் 'அரவம்' என்ற சொல் தமிழ் மொழியில் யாண்டும் வழங்கப்பட்டதில்லை, தெலுங்கர்களும் கன்னடர்களும் தக்காணி களும் அவ்வாறு அழைக்கின்றனர் என்று மேற்கூறின மையால் அச்சொற்பொருள் தமிழொழிந்த ஏனைய மொழிகளிலே தான் தேடக்கிடைப்பதாம். " — (கா. ஒ. இ - பக் 21)

என்ற விளக்கப் பகுதியினுல் 'அரவம்' என்ற சொற்குப் பொருள் புரியவில்லை என்று நாம் இன்னமும் மனந்தடுமாற அவசியமில்லை. குழப்பமும் இதிலேதுங் கிடையாது.

எனவே தக்காணிகளும், கன்னட, தெலுங்கர்களும் 'அரவம்' எனவழைத்தது, தமிழையல்ல; தெலுங்கு நாட்டையடுத்த கொடுந்தமிழ் பேசும் அருவா நாட்டினர் பேசிய கொடுந் தமிழையே யாகும். ஆக, 'அரவம்' என்பது கொடுந்தமிழாக ஒரு குறு நிலப்பரப்பில் வழங்கப்பட்ட கொடுந்தமிழையேயன்றி செந்தமிழைக் குறிப்பதாகாது

மேற்கூறிய கருத்துக்கள் ஆய்வு முறையில் கண்ட உண்மை களாம். இனி 'அரவம்' என்ற சொற்கு நயம்படப் பெயர்க் காரணம் காணும் பல கருத்துரைகள் உண்டு. அந்நயவுரை களின் ஒருமித்த நோக்கு 'அரவம்' என்பது 'தமிழ்மொழி' யினை முழுமையாகக் குறிப்பது என்பதேயாம் அவ்வழியிலே நின்று நாம் பொருள் காண்கின்றபோது கிடைக்கின்ற கருத்துக் களெல்லாம் இரண்டாந் தரத்தினவே. அவற்றை ஈண்டு நோக்குவோம்,

இடைக்காலத்தில் தமிழின் ஒரு கூறு (கொடுந்தமிழில் ஒரு பகுதி) அரவம் என அழைக்கப்பட்டது. பிறகு அவ்வழக்கு அந்தணர் போன்ற உயர்சாதிக்காரர்களால் தமிழ் முழுதையுமே குறிக்குமளவிற்குப் பல்கியிருந்திருத்தல் வேண்டும் ஆக 'அரவம்' என்ற 'குறைந்த மதீப்பீடுடைய' சொல் தெலுங்க அந்தணர் களாலும், ஏனையோராலும், (கன்னடம், ஆங்கிலேயர், முஸ்லீம்) தமிழை 'வெற்றூரவாரம்' உடையமொழி என்ற தகுதி குறைந்த நிலையில் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும் மேலும் தமிழ் பேசிய வர்கள் அனைவரும் அரவாடு எனவும் அரப்பான் எனவும் அழைக்கப்பட்டனர் அந்தணர்கள் வருணாச்ரமத்தைத் தமிழ

கத்தே நிலைநிறுத்தித் தங்களைத் தலைமையானவர்களாக முழுமையாக நிலைநாட்டிக்கொண்ட பிறகு தமிழனை 'இழிசினன்' என்ற பொருளில் அரப்பான் எனவழைத்தனர் இவ்வரப்பான் எனுஞ் சொல் இன்றும் 'செட்டி நாடு' பகுதிகளில் இழிசினன் என்ற பொருளில வழங்கி வருவது நோக்கத் தக்கது.

பண்டாரகர் குண்டெர்ட் போன்றோர் 'அறவம்' என்பது 'அரவம்' என ரகர றகர மயக்கத்தால் அழைக்கப்பட்டிருக்கலாம் என்று குறிப்பிட்டுள்ளனர். அதாவது 'அறநூல்கள் நிறைந்த மொழி'யாம் தமிழ் அறவம் என்றே அழைக்கப்படுதல் சாலும் என்கிறார்கள் அவர்கள்.

தமிழுக்குப் பற்றுக்கோடு 'தமிழம்' ஆயிற்று, அறிவுடைய தமிழர்களது பற்றுக் கோடாய் தமிழ் 'அறவம்' ஆயிற்று என்பாருமுளர். இதுபோன்று பல்வேறு வகைகளில் 'அரவம்' என்பதன் பெயர்க்காரணத்தினை நயம்படக் காணலாம்.

ஆயினும் ஆய்வு முறையில் 'அரவம்' என்ற சொல்லின் பெயர்க்காரணத்தினை ஆய்கின்றபோது கால்டுவெல் அவர்கள் குறிப்பிடுகின்ற வழியில் தக்காணத்திலுள்ள முஸ்லீம்களும், கன்னடர்களும், தெலுங்கர்களும் 'அரவம்' என்ற குறியீட்டால் விளித்தது செந்தமிழையல்ல என்பது உறுதியான கருத்தாகப் புலப்படுகின்றது. இக்கட்டுரையினாற் தெளிவாகும் கருத்து. 'அரவம்' என்ற குறியீடு தக்காணிகளால் (தெலுங்க, கன்னட முஸ்லீம்கள்) கொடுந்தமிழ் வழங்கி வந்த அருவா நாட்டுக் கொடுந்தமிழைத்தான் குறிப்பிடுவதாகும். என்பதேயாம்.

# பாரதிதாசனாரின் குழந்தைப் பாடல்கள்

இ. சுந்தரமூர்த்தி,
விரிவுரையாளர், தமிழ்த்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்.

இருபதில் தமிழ் வளர்த்த இணையற்ற கவிஞர் பெருமக்களுள் ஒருவர் புதுவை கனக சுப்புரத்தினமென்னும் பாரதிதாசன் இவரைப் 'பாரதியாருக்கு அடுத்தபடி புகழ்பெற்று விளங்கும் கவிஞர் பெருமகன்' என்கிறார் டாக்டர் மு. வ. அவர்கள்.[1] தமிழாசிரியராய், இதழாசிரியராய், அரசியலாளராய், திரைப் படத்துறையில் ஈடுபட்டவராய் விளங்கிய கவிஞரைப் 'புரட்சிக் கவிஞர்' என்றே கவிஞருலகம்/தமிழுலகம் போற்றியது

'தமிழ் எங்கள் உயிருக்கு நேர்' என்னும்போது தமிழ்க் கவிஞராய்த் தமிழ்ப்பற்றாளராய்க் காட்சியளித்த பாரதிதாசன்,

'எல்லார்க்கும் எல்லாம் என்று இருப்பதான
இடம்நோக்கி நடக்கின்றது இந்தவையம்'

என்பன போன்ற பாடல்களில் பொதுவுடைமைக் கவிஞராய்த் துலங்குகிறார். 'மூடத்தனத்தின் முடைநாற்றம் வீசுகின்ற காடு மணக்க வரும் கற்பூரப் பெட்டகம் என்னும்போது பகுத்தறிவுக் கவிஞர்; 'இருட்டறையில் உள்ளதடா உலகம்; சாதி இருக்கின்றது என்பவனும் இருக்கின்றானே என்று பாடும்போது சமுதாயத்தைச் சீர்திருத்த விழையும் சீர்திருத்தக் கவிஞர் 'சஞ்சீவி பர்வதத்தின் சாரலில், பாண்டியன் பரிசில், தமிழச்சியின் கத்தியில், வீரத்தாயில்' கவிஞர் காப்பியக் கலைஞர்; குடும்ப விளக்கில் உளவியல் கவிஞர்; அழகின் சிரிப்பில் கற்பனைக் கவிஞர்; இசையமுதூட்டும் பாடல்களில் இசைபாடும் இனிய

---

29—4—75 அன்று சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை நடத்திய பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த நாள சிறப்புக் கருத்தரங்கில் படிக்கப்பெற்ற கட்டுரை.

---

மேற்பார்வை

பேராசிரியர் டாக்டர். ந சஞ்சீவி,
எம் ஏ, எம். லிட்., பிஎச் டி,. டிப், மானிடவியல்,
டிப். அரசியல் - ஆட்சியியல்,
தமிழ்த்துறைத் தலைவர். சென்னைப் பல்கலைக்கழகம்.

கவிஞர்; பிசிராந்தையார், சேரதாண்டவம் போன்ற படைப்புகள் அவரை நாடகக்கவிஞர் என நவிலும் காதற் பாடல்களில் காதற் கவிஞராகவும் விளங்கும் பாரதிதாசன் தாம் படைத்த கவிதைகளின் வாயிலாக எல்லாத் துறைகளிலும் ஈடும் இணையுமற்ற படைப்பாளியாக விளங்குகிறார்.

'பாரதிதாசனுடைய நடை அவருடைய உள்ளம் போலவே வேகம் மிகுந்தது; பொருள் விளங்காத அருஞ்சொற்கள் அவருடைய பாடல்களில் இல்லை; எல்லாம் பலரும் வழங்கும் எளிய சொற்களே! அந்தச் சொற்களுக்கு அவர் ஊட்டும் வேகத்தையும் ஆற்றலையும் என்ன என்பது? எதையுமே உள்ளத்து உணர்ச்சி இல்லாமல் சொல்ல அறியாதவர் அவர் எதையாவது வெறுத்தால், மிகக் கடுமையாக வெறுத்துத் தள்ளுவார்; பழித்தால் மிகக் கடுமையாகப் பழிப்பார் அவருடைய தாக்குதல் வாள்வீச்சை விடக் கடுமையானது. இவ்வளவு வேகமும் கடுமையும் ஆற்றலும் நிரம்பிய பாடல்கள் பழைய மரபாக வந்த எளிய விருத்தங்கள்; அல்லது எளிய சிந்து மெட்டுகள். அல்லது சிறு சிறு கண்ணிகள். எளிய பாட்டு வடிவங்களை இவ்வளவு வேகமான உணர்ச்சிகளுக்குப் பயன்படுத்திய அவருடைய திறன் போற்றத்தக்கது' என்று பாராட்டும் அறிஞரின திறனாய்வுக் கருத்துகள் இங்கு எண்ணத் தக்கன.[2]

உணர்ச்சியின் எல்லையில் அவர் படைத்த பாடல்கள் படிப்பார்க்கு எத்தகைய உணர்ச்சியினை விளைக்கும் என்பதும் கற்பார் உணர்ந்த ஒன்றும் இத்தகைய உணர்ச்சிக் கலைஞராக — கவிஞராக விளங்கும் பாரதிதாசனர், குழந்தைப் பாடல்களில் தாம் எத்துணை அளவு ஒன்றிவிடுகின்றார்: குழநதையின், அசைவுகளிலும், ஆடல்களிலும் பாடல்களிலும், நெஞ்சத்தைப் பறிகொடுத்து — நெகிழ்ந்து மகிழ்ந்த — மகிழ்ந்து நெகிழ்ந்த பாடல்கள் படிப்பார் உள்ளத்தைத் தொடும் பான்மையன.

அன்னை தன் பிள்ளையை அணைத்தல் கோடையிற் குளிர் புனல் ஓடையில் குளித்தலை ஒக்கும் என்றும் குழந்தை அசைத்த குளிர்மலர்க் கை அன்னையின் உடலிற்படும்போது அவள் உயிரே சிலிர்க்கும் என்றும் பாடும் பாரதிதாசனுக்கு அன்பால், அன்னை சுவைத்த சின்னஞ்சிறு கால் 'வடியும் சாற்றுக் கொடி முந்திரிக் குலையாகத்' திகழ்கிறது.[3]

இளகிய பொன் உருக்கின்
சிற்றுடல்; இரு நீலக்கண்;
ஒளிபடும் பவழச் செவ்வாய்;
ஒருபிடிக் கரும்பின் கைகால்;
அளிதமிழ் உயிர்பெற் றங்கே [4]
அழகொடு அசையும் பச்சைக்கிளி.

என்று குழந்தைத் தமிழ்ப் பாடலிலும் தமிழ்க் குழந்தையினை மறவாதவர் கவிஞர் பாரதிதாசனார்.

குழந்தையின் ஓராண்டு வளர்ச்சியைப் படம் பிடித்துக் காட்டுவதில் அவர் உள்ளம் துள்ளிய துள்ளலைக், 'குடும்ப விளக்கு'க் கவிதை நமக்கு அள்ளித்' தருகிறது

வான்பார்த்துக் கிடந்த மேனி
மண்பார்த்துக் கவிழ்த்தும், பின்னர்
தேன்பார்த்த மலர்க்கை யூன்றிச்
செம்மையாய்த் தவழ்ந்தும் நின்றும்
தான்பார்க்க அங்கும் இங்கும்
தள்ளாடி நடந்தும், கெண்டை
மீன்பார்த்த கண்ணாள் பெண்ணாள்
ஓராண்டு மேவல் உற்றாள் [5]

என்னும் கவிஞர் பாடலில் குழந்தையின் வளர்ச்சியினை உளவியல் நோக்கோடன்றி உடலியல் நோக்கோடும் அவர் பார்த்த பார்வை நன்கு புலனாகும்

பல்துறைக் கலைஞராகக் கவிஞராகத் திகழும் பாரதிதாசனாரின் குழந்தைப் பாடல்களைப் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம் 'பாரதிதாசன் பன்மணித்திரள்' என்னும் அவர் தம் நூலில் மொத்தம் பதினெட்டுப் பாடல்கள் குழந்தைப் பாடல்களாகத் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. அவை வருமாறு:

1. தாய் தன் குழந்தைக்கு
2. தாயும் சேயும்
3. அன்னையின் அன்பு
4. குழந்தைக்கு அழைப்பு
5. துடைப்பிள்ளைக்குத் தொடக்கக் கல்வி
6 இளைய மாணவர் திருநாள்
7 பார்த்து நட

8. படி
9. பேசு
10. திருடாதே
11. எலிகள்
12. எலிக்குஞ்சும் பூனைக்குட்டியும்
13. உங்கள் தெரு கெட்ட தெரு
14. அக்கக்கா
15. குழந்தை வளர்ப்பு
16. காட்சி
17. விண்மீன்
18. தேர்வு

இவையேயன்றி 'அழகின் சிரிப்பில்' கூறப்படும் பாடல்களையும் குழந்தைப் பாடல்கள் என்றே கூறலாம். ஆனால் இவை இயற்கையின் வருணனையை எழிலுறச் சித்தரிப்பவையே. குடும்ப விளக்கில் நான்காம் பிரிவான 'மக்கட் பேறு' பகுதியில் வரும் பாடல்களும் இங்குக் குறிக்கத் தக்கன.

மேலே கூறிய 18 பாடல்களும், குறிப்பாகக் குடும்ப விளக்கில் காணப்படும் குழந்தைப் பாடல்களும் குழந்தை வளர்ப்பிலும், வாழ்விலும் எத்துணை அளவு பாரதிதாசனர் ஈடுபட்டுள்ளார் என்பதை நனிவிளக்குவனவாய் அமைந்துள்ளன. குழவிப் பருவத்திலேயே கரும் நெறிமுறைதாம், வாழ்வு முழுதும் பயன்படும். இதனை இனிதுணர்ந்த உளவியல் கவிஞரான பாரதிதாசன் இளம் வயதிலேயே குழந்தைக்கு நல்ல ஆற்றல்கள் அமைய வேண்டும் என்று எண்ணிப் பாடுகிறார். "இன்றைய குழந்தை நாளைய மனிதனைக் காட்டும்" என்பார் அறிஞர் மில்டன். இன்றைய குழந்தையே நாளைய உலகம்; எதிர்காலம், எனவே குழந்தைப் பருவத்தில் நாம் காட்டும் விருப்பமே எதிர்கால மனித இயல்பில காட்டும் விருப்பமாகும்.

'உலகத்துக்குப் புதிய விருந்தாக வந்த குழந்தை உடலிலும் உள்ளத்திலும் நன்கு வளர்ச்சி பெற்று என்ன என்னவோ அரிய பெரிய செயல்களையெல்லாம் சாதிக்கப் போகின்றது' என்று பெற்றோரும் மற்றோரும் எண்ணுவர். குழந்தையின் மன இயல்பை நன்கறிந்து கொண்டு அதை நல்ல முறையில் வளர்க்கும் பெற்றோர்கள் அதன் வாழ்க்கையிலே வெற்றிக்கிடைப்பதற்குப் பெரிதும் உதவியாக இருக்கலாம். குழந்தைக்கு இயற்கையாக அமையும் ஆற்றல்கள் அதன் எதிர்காலத்தைப் பெரிய

தோர் அளவிற்கு நிர்ணயம் செய்யும் என்ருலும் அந்த ஆற்றல் கள் ஓங்குவதற்கும் மழுங்கிப் போவதற்கும் பெற்ரோரும் அவர் களால் பெரிதும் உண்டாக்கப்படும் சூழ்நிலேயும் முக்கிய காரணங்களாகும் ஆகையால்தான் பெற்ரோர்கள் மனத்தத்து வத்தையும் அறிந்திருக்க வேண்டுமென்று இக்காலத்திலே வற்புறுத்திப் பேசப்படுகிறது' என்பர் அறிஞர் பெ. தூரன் அவர்கள் [6] இந்த வகையில் கவிஞர்பாரதிதாசனுரின் குழந்தைப் பாடல்கள் குழவிப் பருவத்திலேயே வாழ்வுநெறிக்கு உரமூட்டு வனவாய் அமைந்துள்ளன.

### குழந்தை வளர்ப்பு

குழந்தைகளே ஒன்று கூட்டி வளர்த்து நல்லுலகை உருவாக்கு வது அரசியலாளர் கடமை என்கிருர் கவிஞர். தேன் கூட்டின் ஈராயிரம் அறைகளிலும் செவ்வனே ஒன்றி வாழும் தேனீக்களேச் சான்றுகாட்டிப்பாடும் அவர் தம் உவமைத்திறம் சாலச்சிறந்தது.

தழைந்த வாழ்வு தாய கம்பெறக்
குழந்தைகள் தம்மைக் கூட்டி வளர்ப்பது
முடியா தென்று முணுமுணுப் பார்க்கு
முடியு மென்று மொழிந்தன ஈக்கள். [7]

இது தேனீக்கள் புகட்டும் தேனினுமினிய பாடம்.

ஈன்றவர் ஈன்ருர் இளங்குழந் தைகளே
தேன்கூட் டைப்போல் திருந்த வளர்ப்பது
நாட்டை முன்னின்று நடத்துவார் கடமை [8]

என்று கூறிய கவிஞர் 'ஒரு நாட்டிலுள்ள உடைமை அனைத்தும் பெருநாட்டத்தோடு பேசுவதாயின் அந்நாட்டுக் குழந்தைகட்கு உரியவை' என்று பொது உடைமைத் தத்துவம் பேசுகின்ருர். தலைமை பெற்றவர் தம் குழந்தையை நினைப்பதால் மட்டும் பயனில்லே. அன்னை நாட்டு அருஞ்செல்வங்களேயும் வளர்க்க வேண்டும் என்பது பாரதிதாசனுடைய பயன்மிகு கருத்தாகும்.

### பள்ளிக்குச் செல்லத் தூண்டுதல்

குழந்தை வளர்ந்த பின் பள்ளிக்குச் செல்லுமாறு தூண்டும் அவருடைய பாடல்களில் உளவியல் கூறுகள் நன்கு புலனு கின்றன. பள்ளிக்குச் செல்லாமல், மணியொலி கேட்டும் கேளாதது போல் நின்று கொண்டிருக்கும் குழந்தைகளே இனிய தமிழில் பாடி அழைக்கின்ருர் இன்றமிழ்க் கவிஞர். [9]

கண கண வென்று மணியடித்தது
காது கேட்கலையா? — பாப்பா
காது கேட்கலையா தம்பி
காது கேட்கலையா — உன்

கையிற் சுவடிப் பையை எடுக்க
நேரம் வாய்க்கலையா?

முணு முணு வென்று மூலையிலே
நின்றால் என்னவரும்? — பாப்பா
நின்றால் என்னவரும்? — தம்பி
நின்றால் என்னவரும் — என்

★முன்னே வந்து சொன்னால் வாயின்
முத்தா சிந்திவிடும்.

பாப்பாவையும் தம்பியையும் அழைத்து அழைத்து மூன்று மூன்று முறை செய்தியைச் சொல்லுவதும், அன்புக் கோபத்தில் 'வாயினைத் திறந்து பதில் சொல்லுமாறு' கேட்பதும் இனிமையை நல்குவதுடன், மிக இயல்பாகவும் அமைந்துள்ளன.

பள்ளிக்குச் செல்லாதற்குக் காரணம், 'பலபம் இன்மையாலா? அல்லது பாடம் எழுத மறந்த தொல்லையா? சலவைச் சட்டை இன்மையினால் செல்லவில்லையா? என்று ஒவ்வொரு கேள்வியாகக் கேட்டுக் கொண்டேவந்து இறுதியில் 'மனத்தில் உள்ளதைச் சொல்ல வேண்டும்' என்று கேட்கும்போது ஒரு தந்தையின் உள இயலை - உளநிலையைத் தெள்ளிதின் காட்டுகின்றார் கவிஞர்.

குழந்தையின் பிஞ்சு நெஞ்சத்திலேயே 'தனித்தமிழ்ப் பேசு' என்ற தமிழ்ப்பண்ணை ஓதும் கவிஞரின் தமிழ் நெஞ்சம் போற்றுதற்குரியது பண்ணோடும் பழகு தமிழோடும், சாலை விதிமுறைகளையும் இயல்பாகப் புகுத்தி விடுவதும் கூர்ந்து நோக்கத்தக்கது.

'தனித்தமிழில் கலகல என்று
தட்டாமல் பேசு — பாப்பா
தட்டாமல் பேசு — தம்பி
தட்டாமல் பேசு — நீ

சாலையோரம் நடக்க வேண்டும்
எங்கே கைவீசு!

உணர்ச்சிக் கவிஞருமான பாரதிதாசன் இங்கு இனிய எளிய சொற்களில் 'குழந்தையாகவே' மாறிவிடுகின்றமை எண்ணி வியத்தற்குரியதாய் இலங்குகின்றது.

படிப்பு

'மலைவாழை யல்லவோ கல்வி' என்று மனமகிழ்ந்து பாடிய கவிஞர் பாரதிதாசனின் மற்றொரு அருமையான பாடல் 'படி' என்னும் தலைப்பில் அமைந்துள்ளதாகும்.[10] 'படி' என்னும் சொல்லைத் தமக்குப் 'படிய' வைத்த கவிஞரின் சொல்லாற்றல் எண்ணி மகிழத்தக்கது

எடுப்பு

நூலைப்படி — சங்கத் தமிழ்
நூலைப்படி — முறைப்படி
நூலைப்படி —

உடனெடுப்பு

காலையிற்படி கடும்பகல் படி
மாலை இரவு பொருள்படும் படி
நூலைப்படி

என்று எடுப்பிலும் தொடுப்பிலும் சங்கத் தமிழ் நூலை எப்படிப் படிக்க வேண்டும் என்று சுட்டுகின்ற கவிஞர்,

கற்பவை கற்கும்படி
வள்ளுவர் சொன்னபடி
கற்கத்தான் வேண்டும் அப்படிக்
கல்லாதவர் வாழ்வ தெப்படி ?

என்று கேட்கின்றார். வள்ளுவத்தைத் தம் கவிதைகளில் பல இடங்களிலும் இணைத்தும் இழைத்தும் காட்டுகின்ற கவிஞர் குழந்தையின் பிஞ்சு நெஞ்சத்திலேயே வள்ளுவப் பாலை வான் கருணையோடு புகட்டுகின்றார் எனலாம்.

பண்பாட்டைச் சிதைக்க வரும் பாழ்படுத்தும் நூல்களையும் சாடி அவற்றையெல்லாம் படிக்க வேண்டா என்பதனை,

'பொய்யிலே முக்காற்படி
புரட்டிலே காற்படி
வையகம் ஏமாறும்படி
வைத்துள்ள நூல்களை
ஒப்புவ தெப்படி ?

என்று வினவாகத் தொடுத்து விடை கேட்கின்றார் பாரதிதாசன். குழந்தையின் உள்ளம் மட்டுமல்ல; பெரியவர்களின் உள்ளத்தையும் தொடும்,

'பொய்யிலே முக்காற்படி
புரட்டிலே காற்படி'

என்னும் வரிகள் போலி நூல்களையும் எப்படிச் சாடுகின்றன? பிஞ்சு நெஞ்சிலேயும் பகுத்தறிவையும், ஆய்வு நோக்கையும் வளர்க்கும் பான்மையோ?

பார்த்து நட :

சாலையில் எப்படி நடக்க வேண்டும் என்று குழந்தைக்குப் பாடும் அவர் பாடல் சமுதாயத்தை எண்ணியும் பாடியது போலவே தோன்றுகிறது. வண்டி, மாடு முதலியவற்றைப் பார்த்து ஒதுங்குவதுபோல தீயோர்களையும் பார்த்து ஒதுங்க வேண்டும் என்ற குறிப்புப் பொருளும் இப்பாடலில் குறிப்பாகத் தோன்றுகிறது எனலாம். வருபவர் மேல் இடித்துத் தள்ளும் பிள்ளையை நொள்ளை என்றும், வண்டி வரக்கண்டும் விலகாமல் இருப்பவனை நொண்டி என்றும், செவிடன் என்றும், கண்ணிருந்தும் காணாதவனை முட்டாள் என்றும், கூறும் அவர் சொற்கள் குழந்தையின் உள்ளத்தில் நன்கு பதிந்து தீயனவற்றைத் தவிர்த்துக் கொள்ள இளம்பருவத்திலேயே முயலும் என்பது திண்ணம்.

தெருவோரம் இடதுபக்கம்
செல்லும் நல்ல பிள்ளை
வருபவர்மேல் இடித்துக்கொள்ளும்
பிள்ளை ஒரு நொள்ளை
மாடுவரும் குதிரை வரும்
வருமல்லவா வண்டி?
வரக்கண்டும் விலகாமல்
இருப்பவன் ஓர் நொண்டி
புல்லிருக்கும் அதற்குள்ளே
பூச்சிபொட்டுக் கிடக்கும்
புற்றிருக்கும் அதற்குள்ளே
பாம்பிருந்து கடிக்கும் 11

என்பன போன்றவை குழந்தைக் கவிஞரின் 'இனிய அபாய அறிவிப்புகள்' எனலாம்.

— தொடரும்.